**காசோலைகளுக்கு பணம் கொடுக்க மறுப்பு –
அவைகளுக்கான நடைமுறைகள்**

**DBOD. BC. Leg. No113/09.12.001/2002-03 ஜுன் 26, 2003**

அனைத்து அட்டவணைக்குட்ப்பட்ட வணிக வங்கிகளுக்கும்
(பிராந்திய கிராம வங்கிகள் மற்றும் வட்டார வங்கிகள் நீங்கலாக)

அன்புடையீர்,

**காசோலைகளுக்கு பணம் கொடுக்க மறுப்பு –
அவைகளுக்கான நடைமுறைகள்**

கோய்போரியா குழுவின் பரிந்துரையான பணம் கொடுக்க மறுக்கப்படும் உபகரணங்களை, தாமதமின்றி உடனே வாடிக்கையாளருக்கு, எப்படியும் 24 மணி நேரத்திற்குள் திருப்பி அனுப்பிட வேண்டும் (Ref.No.3.36 – எங்களது சுற்றறிக்கை DBOD.No. BC. 74/09.07.001/91-92, 28ம் தேதி ஜனவரி 1992).

2. பங்குச் சந்தை ஊழல் விவகாரத்தை விசாரித்த பிறகு கூட்டு பாராளுமன்ற குழு (JPC – ஜே.பி.சி.) பரிந்துரைத்தது. (அதன் அறிக்கையில் பத்தி 5.214ல்) என்னவென்றால் பங்கு பரிவர்த்தனையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட காசோலைகளுக்கு கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளைப் பற்றி ரிசர்வ் வங்கி, குறிப்பிட்ட வழிகாட்டு நெறிகளை அனைத்து வங்கிகளுக்கும் அனுப்பிட வேண்டும். மேற்சொன்ன ஜே.பி.சி. பரிந்துரைகளின் அடிப்படையில் அனைத்து திருப்பி அனுப்பப்பட்ட காசோலைகளுக்கான நடைமுறையில் உள்ள உத்தரவுகளை மறுசீராய்வு செய்யப்படுகிறது.

3. மேற்கண்ட உத்தரவுகளை கருத்தில்கொண்டு பணம் கொடுக்க மறுக்கப்படும் காசோலைகளுக்கு சரியான நடைமுறையை வங்கிகள் கடைபிடித்துக் கொண்டிருக்கின்றன என்று நாங்கள் நம்புகிறோம். எனினும் இவ்விஷயத்தில் அனைத்துவங்கிகளும் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவது அவசியம் என கருதுகிறோம். பங்குச் சந்தை பரிவர்த்தனைகளின் தீர்வு சம்பந்தமாக பணமில்லாமல் திரும்பி வரும் அனைத்து காசோலைகளுக்கும் இச்சுற்றறிக்கையின் பத்தி 4ன்கீழ் கூடுதல் உத்தரவுகளை கடைபிடிக்கலாம். அதோடு பணமில்லாமல் திரும்பி வரும் அனைத்து காசோலைகளுக்கு ஏற்கனவே உள்ள உத்தரவுகளோடு வங்கிகள் மேலே குறிப்பிட்டவாறும் செய்யலாம்.

### 4. I . பணமில்லாத காசோலைகளை திருப்பிக் கொடுக்கும் மற்றும் அனுப்பும் நடைமுறை

i. வங்கிகளின் தீர்வு நிலையங்களின் ஒரு சீரான கட்டுபாடுகள் மற்றும் விதிகளின்படி அந்தந்த தீர்வு நிலையத்தால் நிர்ணயிக்கப்பட்ட திருப்பி

அனுப்பும் ஒழுங்குமுறையின் அடிப்படையில் பணம் கொடுக்கும் வங்கி, தீர்வு நிலையங்கள் மூலம் அளிக்கப்பட்ட பணமில்லாத காசோலைகளை திருப்பி அனுப்ப வேண்டும். அவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட பணமில்லாத காசோலைகளை, காசோலைகளை ஏற்கும் வங்கி உடனே பணம் பெறுவோர் அல்லது காசோலைகளை வைத்திருப்போருக்கு அனுப்பிட வேண்டும்.

ii. வங்கியில் உள்ள இரண்டு கணக்குகளுக்கிடையிலான மாற்றும் நடவடிக்கையிலான பரிவர்த்தனையில் பணம் வழங்கும் வங்கியிடம் நேரடியாக அளிக்கப்படும் காசோலைகள் விஷயத்தில், அவ்வங்கி அத்தகைய பணமில்லாத காசோலைகளை பணம் பெறுவோர் அல்லது காசோலைகளை வைத்திருப்போருக்கு உடனே திருப்பி அனுப்பிட வேண்டும்.

iii. அனைத்துக் கணக்குகளிலும் பணமில்லாத மறுக்கப்படும் காசோலைகளை "போதிய நிதியின்மை" என்ற நினைவுக் குறிப்பை மறுப்பதற்கான காரணமாக குறிப்பிட்டு திரும்பி அனுப்பப்பட வேண்டும்

## 4. II. மறுக்கப்பட்ட காசோலைகளைப் பற்றிய விவரங்கள்

1. ரூ. ஒரு கோடியும் மற்றும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் மறுக்கப்பட்ட காசோலைகளை பற்றிய விவரங்கள் வங்கியின் நிர்வாக தகவல் அமைப்பில் (MIS) இடம் பெற வேண்டும். அந்தந்த கிளைகள் அம்மாதிரி விவரங்களை தங்களுடைய கட்டுபாட்டு அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

2. பங்கு பரிவர்த்தனை சார்பாக எடுக்கப்பட்ட காசோலைகள் மறுக்கப்படும்போது அவை பற்றிய விவரங்கள், அவை எத்தகைய மதிப்பில் இருந்தாலும் வங்கிகளால் தனியாக தொகுக்கப்பட்டு அவர்களின் இடைத்தரகர் பற்றிய எம்.ஐ.எஸ் (MIS)ல் பதிவாக்கப்பட்டு அந்தந்த தலைமை அலுவலகங்கள் மற்றும் மத்திய அலுவலங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

## 4. III. அடிக்கடி மறுக்கப்படும் சம்பவங்களை கையாள்வது

I. வாடிக்கையாளரிடையே நிதிக்கள(financial) ஒழுங்கை அமல் படுத்த, வங்கிகள் காசோலை வசதியுடன் கூடிய கணக்குகளை நடத்திட ஒரு நிபந்தனையை அறிமுகப்படுத்த வேண்டும். அதாவது காசோலை எழுதிக் கொடுப்பவரின் ஒரு குறிப்பிட்ட கணக்கில் ரூபாய் ஒரு கோடியும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் எடுக்கப்பட்ட காசோலைகள், கணக்கில் போதிய நிதியில்லாததால் ஒரு நிதியாண்டில் நான்கு தடவைகளுக்கு மேல் மறுக்கப்படும்போது புதிய காசோலைப் புத்தகம் கொடுக்கப்படமாட்டாது. அதோடு வங்கி அதன் விருப்பத்திற்கு ஏற்ப

நடப்புக் கணக்கை முடித்திடவும் முனையலாம். பணக்கடன் கணக்கு, இருப்புக்குமேல் எடுப்புகணக்கு போன்றவகை கடன் கணக்குகளில் இவ்வகைக் கணக்குகளைத் தொடர்வதும் அவற்றிற்கு காசோலை வசதி அளிப்பதும் கடன் கொடுக்கும் அதிகாரமுடையவரை விட உயர்வான அதற்குரிய ஆணையுரிமை கொண்டவரால் மறுசீராய்வு செய்யப்பட வேண்டும்.

II. ஏற்கனவே உள்ள கணக்குகள் விஷயத்தில் மேலே குறிப்பிடப் பட்ட (I) நிபந்தனையை அறிமுகப்படுத்தும் நோக்கத்திற்காக வங்கிகள் புதிய காசோலை புத்தகத்தைக் கொடுக்கும்போது அதனைச் சார்ந்தவர்களுக்கு புதிய நிபந்தனையைப் பற்றி ஒரு கடிதம் மூலம் அறிவுறுத்தவேண்டும்.

III. காசோலை எழுதிக்கொடுப்பவரின் ஒரு குறிப்பிட்ட கணக்கில் ஒரு நிதியாண்டில் மூன்றாவது தடவையாக ஒரு காசோலை மறுக்கப்படும்போது சம்பந்தப்பட்ட அங்கத்தினருக்கு வங்கிகள் எச்சரிக்கை அறிவுரை வெளியிட வேண்டும்.

**4. IV. பொது**

a. நீதிமன்றத்திலோ, நுகர்வோர் மன்றத்திலோ அல்லது வேறு ஏதேனும் தகுதி வாய்ந்த அதிகாரக் குழுவிடமோ காசோலை மறுக்கப்பட்டது தொடர்பான வழக்கில் காசோலை மறுக்கப்பட்ட உண்மையை நிருபிப்பதற்காக புகார் அளிப்பவரின் (அதாவது பணம் பெறுவோர்/மறுக்கப்பட்ட் காசோலையை கையில் வைத்திருப்பவர்) சார்பில் சாட்சிகள் அளித்திட வங்கிகள் முழு ஒத்துழைப்பை அளித்து அவருக்கு காசோலை மறுக்கப்பட்ட உண்மையை ஆவணஞ்சார்ந்த அத்தாட்சியாக வழங்கிட வேண்டும்.

b. மேற்கண்டதில் பகுதி IIல் கூறப்பட்ட விஷயங்கள் தொடர்பாக 2003-04 முதல் காலாண்டிலிருந்து தொடங்கி அதாவது ஜுன் 2003 வரை முடியும் காலாண்டு ஒவ்வொரு காலாண்டிலும் வங்கிகள் தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்களை தங்கள் தணிக்கை மற்றும் நிர்வாகக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

5. வங்கிகள் அவர்களுடைய குழுமத்தின் ஒப்புதலின் அடிப்படையில் மறுக்கப்பட்ட காசோலைகளை கையாண்டிட சரியான நடைமுறையை மேற்கொள்ள அறிவுறுத்தப்படவேண்டும். அதில் வங்கி ஊழியரும் அல்லது ஒரு நபரும் காசோலை எழுதிக் கொடுப்பவரோடு கூட்டுச்சேர்வதை தடுத்திட உள்ளார்ந்த தடுப்பு நடவடிக்கைகளும் சோதிப்புகளும் இருந்திடவேண்டும். எதற்கெனில் பணம் பெறுபவர்/ மறுக்கப்பட்ட காசோலையை கையில் வைத்திருப்பவரிடம் மறுக்கப்பட்ட காசோலைகளை தாமதமாக அவருக்கு திருப்பி அனுப்புவது அல்லது அது பற்றிய தகவலை அளிக்காமல் இருப்பது போன்ற நடவடிக்கைகளை தடுப்பதற்கான நோக்கத்தில் வேண்டும். மேலே

குறிப்பிட்ட விஷயத்தில் பணம் பெறுபவருக்கு மறுக்கப்பட்ட காசோலையை விரைந்து அனுப்புதலையும் அத்தகவலை திறம்பட தெரிவித்தலையும் நோக்கமாகக் கொண்டு அதனை கண்டிப்பாக நிறைவேற்றிட வங்கிகள், தங்கள் அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் தேவையான உள்ளார்ந்த வழிகாட்டு நெறிகளை உருவாக்கி, அவற்றை கடைபிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தவேண்டும்

6. தயவுசெய்து பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

உங்கள் நம்பிக்கைக்குரிய

**(C.R. முரளீதரன்)**
**தலைமை பொது மேலாளர்**